


ஆனந்த பாஸ்கர்
PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com




சென்னை மலர்: 01 இதழ்: 147 22.11.2025 சனிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 147 Saturday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(22-11-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-6
பிறை: வளர்பிறை
திதி
துவிதியை மாலை 4.24 வரை
பிறகு திருதியை
நட்சத்திரம்:
கேட்டை மாலை 4.49 வரை
பிறகு மூலம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00-10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி.
சூலம் -கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நலம் |
| ரிஷபம் | ஊக்கம் |
| மிதுனம் | மகிழ்ச்சி |
| கடகம் | சிந்தனை |
| சிம்மம் | ஆதாயம் |
| கன்னி | சுபம் |
| துலாம் | ஆர்வம் |
| விருச்சிகம் | போட்டி |
| தனுசு | உண்மை |
| மகரம் | உயர்வு |
| கும்பம் | சுகம் |
| மீனம் | அன்பு |

# மசோதாக்கள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்கு காலக்கெடு விதிக்கும் வரை ஓயமாட்டோம்

## முதல்வர் ஸ்டாலின்



**சென்னை,நவ.22:**

மசோதா மீது முடிவெடுக்க குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதிக்க முடியாது. அதேபோல, ஆளுநர்கள் உரிய காலக்கெடுவுக்குள் மசோதாக்கள் மீது முடிவெடுக்க உத்தரவிட முடியாது என்றும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான 5 பேர் அடங்கிய அமர்வு தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "மாநில உரிமைகள் மற்றும் உண்மையான கூட்டாட்சிக்கான எங்கள் போராட்டம் தொடரும்!

ஆளுநர்கள் மசோதாக்களை நிறைவேற்றுவதற்கான காலக்கெடுவை நிர்ணயிக்க அரசியலமைப்பை திருத்தும்வரை நாங்கள் ஓயமாட்டோம்!

உச்சநீதிமன்றத்தின் கருத்து தமிழ்நாடு அரசு பெற்ற தீர்ப்பில் எந்த தாக்கத்தை ஏற்படுத்தாது.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுதான் முதன்மையானதாக இருக்க வேண்டும். ஒரு மாநிலத்தில் இரண்டு அரசுகள் செயல்படக்கூடாது.

அரசியலமைப்புக்கான நீதிபதிகள், அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் செயல்பட வேண்டுமே தவிர, அதற்கு மேல் ஒருபோதும் செயல்படக்கூடாது.

மசோதாவை ரத்து செய்யவோ, பாக்கெட் வீட்டோவைப் போல (மசோதா சட்டமாக மாறுவதைத் தடுப்பது) பயன்படுத்தவோ ஆளுநருக்கு நான்காவது வழி இல்லை. அதேபோல வெறுமனே நிறுத்திவைக்கவும் அவருக்கு வழி இல்லை.

ஆளுநர் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுப்பதை காலவரையின்றி தொடர்ந்து தாமதப்படுத்த முடியாது. ஆளுநர் ஒரு மசோதாவை பரிசீலிப்பதற்கு காலத்தாமதம் செய்தால், நீதிமன்றத்தை அணுகி, ஆளுநர்கள் வேண்டுமென்றே செய்யும் செயல்களுக்குப் பொறுப்பேற்கச் செய்யலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

### ஆளுநர் மீது உச்சநீதிமன்றத்தில் வழக்கு

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட 10 சட்ட மசோதாக்களை தமிழக ஆளுநர் ரவி, நீண்ட காலமாக கிடப்பில் போட்டதைத் தொடர்ந்து தமிழக அரசு தரப்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி, தமிழக ஆளுநரின் இந்த செயல் சட்டவிரோதம் என அறிவித்து அந்த 10 மசோதாக்களும் உடனடியாக சட்டமாக அமலுக்கு வந்துவிட்டதாக அறிவித்தனர்.

சட்டப் பேரவையில் மீண்டும் நிறைவேற்றம் செய்து அனுப்பி வைக்கப்படும் சட்ட மசோதாக்கள் மீது ஆளுநர் ஒரு மாதத்திலும், குடியரசுத் தலைவர் 3 மாதங்களிலும் முடிவெடுக்க வேண்டும் எனவும் காலக்கெடு நிர்ணயித்து உத்தரவிட்டனர்.

### பின்னணி?

இந்த உத்தரவையடுத்து, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு,கடந்த மே 13 அன்று அரசியலமைப்பு சட்டம் தந்துள்ள அதிகாரங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்துக்கு 14 கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்ட உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மற்றும் நீதிபதிகள் சூர்யகாந்த், விக்ரம் நாத், பி.எஸ்.நரசிம்மா, அதுல் சந்துர்கர் ஆகிய 5 பேர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு நேற்று தீர்ப்பளித்தது.

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க காலக்கெடு விதிக்கப்பட்டது தொடர்பாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு எழுப்பிய 14 கேள்விகள் தொடர்புடைய வழக்கில், தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு கடந்த வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கியது.

அந்தத் தீர்ப்பில், மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், எந்த பதிலும் அளிக்காமல் ஆளுநர்களால் கிடப்பில் போட முடியாது.

மாநில அரசு நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குதல், நிராகரித்தல் மற்றும் விளக்கத்துடன் சட்டப்பேரவைக்கு அனுப்புதல் அல்லது அதை குடியரசுத் தலைவருக்கு அனுப்புதல் ஆகிய மூன்று விருப்பங்களில் ஏதேனும் ஒன்றைத்தேர்ந்தெடுப்பதற்குதான் ஆளுநருக்கு விருப்புரிமை உள்ளது. மசோதவை நிறுத்தி வைப்பது கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது. ஒரு மாநிலத்துக்கு இரண்டு அதிகார அமைப்புகள் இருப்பதை எங்களால் ஏற்க முடியாது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், அமைச்சரவையும்தான் மாநிலத்தில் இயக்கும் முதன்மையான அதிகார அமைப்பாக இருக்க முடியும். மாநில அரசுக்கு இடையூறு விளைவிக்கும் நடைமுறைகளை ஆளுநர்கள் மேற்கொள்ளக் கூடாது என்றும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## உயர்கல்வித் துறையில் 213 பேருக்கு பணி ஆணை: முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்




தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: உயர்கல்வித் துறை உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் கடலூர், வடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மயிலாடுதுறை மாவட்டம், மணல்மேடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.59.93 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்துவைத்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்: தமிழகத்தில் உள்ள 44 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளை உலகத் தரமான தொழிற்துறை 4.0 தரங்களுக்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக ரூ.2,590.30 கோடி செலவில் மேம்படுத்த டாடா டெக்னாலஜிஸ் நிறுவனம், தமிழக அரசின் தொழில்நுட்ப கல்வி ஆணையரகம் இடையே முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மேலும், அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு, பின்னர் அண்ணா பல்கலைக்கழகத்தால் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு, இப்பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், அமைச்சர் கோவி.செழியன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், உயர்கல்விச் செயலர் பொ.சங்கர், கல்லூரி கல்வி ஆணை எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஜெ. இன்னெசன்ட் திவ்யா, அண்ணா பல்கலைக் கழகத்தின் பதிவாளர் வெ.குமரேசன், டாடா டெக்னாலஜிஸ் நிறுவன செயல் துணைத் தலைவர் சைலேஷ் சரப், உலகளாவிய தலைவர் சுஷில் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நேபாளத்தில் மீண்டும் போராட்டம்: ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு

**காத்மாண்டு,நவ.22:**



நேபாளத்தில் சமூக வலைதளங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை எதிர்த்து ஜென்-ஸீ இளைஞர்கள் கடந்த செப்டம்பரில் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்தினர். பின்னர் இந்த போராட்டம் வேலையின்மை மற்றும் ஊழலுக்கு எதிராக திரும்பியது.

இளைஞர்களின் போராட்டத்தை எதிர்கொள்ள இயலாமல் நேபாள பிரதமர் சர்மா ஒலி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, நேபாளத்தின் இடைக்கால அரசு முன்னாள் தலைமை நீதிபதி சுஷிலா கார்க்கி தலைமையில் அமைக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களாக அமைதி திரும்பிய நிலையில், கடந்த இரு நாட்களாக ஜென்-ஸீ இளைஞர்களுக்கும், சர்மா ஒலி ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் வன்முறை சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இதையடுத்து, பதற்றத்தை கட்டுப்படுத்த பாரா, சிமாரா பகுதிகளில் இரண்டாவது நாளாக மதியம் 1 மணியிலிருந்து இரவு 8 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால அரசின் பிரதமர் சுஷிலா கார்க்கி கூறுகையில், "மார்ச் 25, 2026-ல் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் ஜனநாயக நடைமுறைகள் மீது இளைஞர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். நாட்டை நிர்வாகம் செய்ய புதிய தலைமுறையினரிடம் ஆட்சியை ஒப்படைக்க விரும்புகிறோம்" என்றார்.

## திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவிலில் ஜனாதிபதி திரவுபதி முர்மு வழிபாடு



**திருப்பதி,நவ.22:**

ஜனாதிபதி நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு தனது மகள் இதிஸ்ரீ முர்மு மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் ரேணிகுண்டா விமான நிலையத்திற்கு வந்தார்.

ஜனாதிபதி திரவுபதி முர்முக்கு அறநிலையத்துறை மந்திரி ராம நாராயண ரெட்டி, உள்துறை அமைச்சர் வாங்கலபுடி அனிதா, கலெக்டர் வெங்கடேஸ்வரர், எம்.எல்.ஏ. புலிவர்த்தி நானி உள்ளிட்டோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

பின்னர் சாலை மார்க்கமாக பத்மாவதி தாயார் கோவிலில் தரிசனம் செய்தார். பின்னர் திருப்பதி மலைக்கு வந்து பத்மாவதி தாயார் விருந்தினர் மாளிகையில் தங்கினார்.

நேற்று காலை 9.30 மணி அளவில் வராஹ சாமியை தரிசனம் செய்தார். ஜனாதிபதி திரவுபதி முர்முக்கு தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு, தலைமை நிர்வாக அதிகாரி அணில் குமார் சிங்கால், கூடுதல் தலைமை நிர்வாக அதிகாரி வரவேற்பு அளித்து கோவிலுக்குள் அழைத்துச் சென்றனர்.

இதையடுத்து திரவுபதி முர்மு குடும்பத்தினருடன் ஏழுமலையானை தரிசனம் செய்கிறார்.

ஜனாதிபதி வருகையை முன்னிட்டு திருப்பதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

## இளையராஜாவின் புகைப்படத்தை பயன்படுத்த இடைக்கால தடை - சென்னை ஐகோர்ட்

**சென்னை,நவ.22:**

யூடியூப் சேனல்கள், இசை நிறுவனங்கள், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களுக்கு எதிராக இளையராஜா வழக்கு தொடர்ந்து இருந்தார்.


அவர் தாக்கல் செய்த முறையீட்டு மனுவில், தனது புகைப்படம், பெயர், இசைஞானி என்ற பட்டப்பெயர் என அதையும் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும்.

அனுமதியின்றி தனது புகைப்படத்தை பயன்படுத்தியதன் மூலம் கிடைத்த வருமான விவரங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும். சமூக வலைதளங்களில் முன்னதாக பதிவிட்ட தனது புகைப்படங்களை நீக்க உத்தரவிட வேண்டும் என்று அதில் தெரிவித்து இருந்தார்.

இந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த ஐகோர்ட்,

இளையராஜாவின் புகைப்படத்தை பயன்படுத்த இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. சமூக வலைதளங்களுக்கு எதிராக இளையராஜா தொடர்ந்த வழக்கில் உத்தரவிடப்பட்டுள்ளது.



### மானாமதுரையில்

## மாரத்தான் போட்டியில் கலந்து கொண்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்





**சிவகங்கை, நவ .22:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ஹார்ட் ஃபுல் னெஸ்தி யான அமைப்பும் செர்டு தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய மாரத்தானில் பங்கெடுத்த மானாமதுரை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மிளகனூர், கட்டிக் குளம், கொம்புக்காரனேந்தல், கல்குறிச்சி, வேதியேரேந்தல், மூங்கில் ஊரனி, இடைக்காட்டூர் ஆகிய ஊர்களில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கும்மற்றும் மானாமதுரை பாபா உயர் நிலைப்பள்ளி மாணவர்கள், ஜெயிண்ட ஜோசப் பள்ளி மாணவர்கள் உற்சாகப்படுத்தி மாரத்தானில் பங்கு பெறச் செய்த பள்ளி நிர்வாகத்தை பாராட்டியும் , அரசு பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து நினைவு பரிசு மற்றும் மாரத்தான் போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்ட மாணவ மாணவிகள் அனைவருக்கும் மானாமதுரை ஹார்ட்ஃபுல்னெஸ் பொறுப்பாளர்கள் நேரில் சென்று பாராட்டு சான்றிதழ்களை வழங்கி னார்கள்.

## மரக்கன்றுகள் நடும் பணி



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியம் அம்பலூர் ஊராட்சியில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடும் பணியை ஊராட்சிமன்ற தலைவர் A.P.முருகேசன் துவக்கி வைத்தார். இதில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஹேமச்சந்திரன் குருராஜன், ஊராட்சி செயலாளர் மற்றும் வார்டு உறுப்பினர்கள்,பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்

## திருச்சிராப்பள்ளி தமிழ் சங்கத்தில் சிறப்பு சொற்பொழிவு







**திருச்சி, நவ.23:** திருச்சிராப்பள்ளி தமிழ் சங்கத்தில் சிறப்பு சொற்பொழிவு 20. 11.2025 அன்று மாலை 6 மணி திருமதி கோவிந்தம்மாள் தமிழ் மன்றம் சார்பில் எழுத்தாளர், கல்லூரி மாணவர், பள்ளி மாணவி உள்ளிட்டோருக்கான சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி திருச்சிராப்பள்ளி தமிழ் சங்க அரங்கில் நடைபெற்றது.

திருமதி கோவிந்தம்மாள் தமிழ் மன்ற தலைவர் தமிழ் செம்மல் கோவிந்தசாமி தலைமை வகித்தார். செயலர் ஜெயலட்சுமி துவக்க உரையாற்றினார்.

எழுத்தாளர் ஜனனி அந்தோணி ராஜ் மலர்ந்தும் மலராத மனசு தலைப்பிலும், திருச்சி கல்லூரிமாணவர் சந்துரு சிலம்பின் நீதி தலைப்பிலும், லால்குடி அரசு உயர்நிலைப்பள்ளி ஆறாம் வகுப்பு மாணவி நேகா ஸ்ரீ முத்தமிழ் காவலர் தலைப்பிலும் பேசினார்கள்.

சிறப்பு சொற்பொழி வாற்றியவர்களுக்கு திருமதி கோவிந்தம்மாள் தமிழ் மன்றம் சார்பில் பாராட்டு சான்றிதழ் நினைவு பரிசாக நூல்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

**திருமதி.பிலோமின் ஸ்டெல்லா , திருச்சி**

## அரசு மேல் நிலைப் பள்ளியில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு டிராவல் பேக் வழங்கிய திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன்




**சிவகங்கை, நவ.22:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை முதல்.இரண்டாம் .மூன்றாம் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் சொந்த நிதியில் வருடம் தோறும் ட்ராவல் பேக் வழங்கி வருகிறார்.

இந்த கல்வி ஆண்டில் அதேபோல் உயர் தரமான டிராவல் பேக்குகளை அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கி அனைத்து மாணவர்களும் அதிக மார்க்குகள் எடுக்க வேண்டும் என பாராட்டு தெரிவித்தார்.

இவ்விழாவில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பால தண்டாயுதபாணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.அனைவரையும் தலைமையாசிரியர் அனுராதா வரவேற்றார்.

பரிசுகளை பேரூராட்சி மன்ற தலைவர் த. சேங்கைமாறன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மடப்புரம் ஊராட்சி மன்ற தலைவர் மகேந்திரன். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அறிவுகரசு. நகர் துணைச் செயலாளர் மீனாட்சி சுந்தரம். மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

## இலவச அமரர் ஊர்திகள் பல இருந்தும் என்ன பயன்? அதிகம் பணம் கேட்கும் தனியார் அமரர் ஊர்திகளின் பகல் கொள்ளை!

### பாரத் முன்னணி சார்பில் புகார் மனு!



**சென்னை,நவ,22:** சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயிரிழந்தவர்களின் உடல்களை, உடற்கூராய்வு செய்த பின்னர், அவர்களது வீட்டிற்க்கோ அல்லது மயானத்திற்கோ கொண்டு செல்வதற்கு அவர்களது உறவினர்களான படிப்பறிவு இல்லாத பல ஏழை எளிய பாமர மக்களின் அறியாமையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி, ஒரு சில தனியார் அமரர் ஊர்தி உரிமையாளர்கள், பணத்தாசை பிடித்த ஒரு சில பிணவறை ஊழியர்களின் உதவியோடு அரசின் இலவச அமரர் ஊர்தியை பயன்படுத்த விடாமலும், அதிக பணம் கேட்கும் தனியார் அமரர் ஊர்தியை பயன்படுத்த நிர்பந்திக்கப்படுவதை கண்டித்தும், இறந்தவர்களின் உடல்களை எடுத்துச் செல்லும் பொதுமக்களுக்கு உதவி செய்திட அதற்கென தனியே ஊழியர் ஒருவரை நியமிக்க கோரி 20/11/2025 அன்று பகல் 12.00 மணிக்கு பாரத் முன்னணி ஸ்தாபகத் தலைவர் ஹிந்துக்குரல் வீரத்திரு. கே.எஸ்.சிவாஜி சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை நிலைய மருத்துவ அதிகார (RMO) அவர்களை நேரில் சந்தித்து பாரத் முன்னணி சார்பில் புகார் மனு கொடுத்தார். பாரத் முன்னணி மாநில துணை தலைவர் திரு. வெஸ்டன் ஜெ.மணி, மாநில அமைப்பு செயலாளர்/ வட சென்னை மாவட்ட தலைவர் திரு.M.S.R.காந்தி, மாநில செயலாளர் திரு.ஹரிபாபு , வட சென்னை மாவட்ட துணை தலைவர் திரு. வெங்கடேசன், வட சென்னை மாவட்ட பொதுச் செயலாளர் திரு.கோபாலகிருஷ்ணன், வட சென்னை மாவட்ட பொருளாளர் திரு.சிவ ராஜா, வட சென்னை மாவட்ட இளைஞர் அணி தலைவர் திரு. மதன்குமார், வட சென்னை மாவட்ட மகளிரணி தலைவி திருமதி. சந்திரகலா ஆகியோர் உடன் இருந்தனர்.

ஜெய்ஹிந்த்!...

என்றும் சமுதாயப் பணியில்!!!.

பாரத்முன்னணி ஊடகபிரிவு

தொடர்புக்கு: 9790707055

## மீண்டும் அதிரடி பிரசாரம் தொடக்கம் விஜய் நாளை காஞ்சிபுரம் மக்களுடன் சந்திப்பு



**சென்னை, நவ.22:** வருகிற டிசம்பர் 4-ந்தேதி சேலத்தில் த.வெ.க. விஜயின் பிரசாரத்துக்கு போலீசார் அனுமதி மறுத்து உள்ளனர். இது தொடர்பாக அவர்கள் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகளுக்கு பதில் கடிதம் அனுப்பி உள்ளனர். அதில்,

விஜய் பிரசாரத்துக்கு முந்தைய நாள் 3-ந் தேதி கார்த்திகை தீபம் விழாவுக்காக திருவண்ணாமலைக்கு பாதுகாப்பு பணிக்காக போலீசார் செல்வார்கள். அதே போல் டிசம்பர் 6-ந் தேதி பாபர் மசூதி இடிப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதனால் அன்றைய தினம் போலீஸ் பாதுகாப்பு போடப்படும்.

எனவே நீங்கள் கேட்கும் நாளில் அதாவது டிசம்பர் 4-ந்தேதி விஜய் பிரசார கூட்டத்துக்கு அனுமதி அளிக்க முடியாது என்றும் விஜயின் கூட்டத்துக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க முடியாது என்றும் நீங்கள் உங்கள் தலைமையை தொடர்பு கொண்டு வேறு தேதியை முடிவு செய்து மீண்டும் அனுமதி கேட்டு மனு கொடுங்கள் என்றும் தெரிவித்து இருந்தனர். மேலும் இனி வரும் காலங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறும் போது 4 வாரங்களுக்கு முன்பு அனுமதி கேட்டு மனு கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தனர்.

இதற்கிடையே சேலத்தில் விஜயின் தேர்தல் பிரசார கூட்டம் தள்ளிப் போவதால் அதற்கு முன்பு மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்த விஜய் முடிவு செய்தார்.

இந்த நிலையில் காஞ்சிபுரம் மாவட்ட மக்கள் விஜயை சந்திக்க விரும்புவதாக தெரிவித்ததால் நாளை மறுநாள் (ஞாயிற்றுக் கிழமை) மக்கள் சந்திப்பை நடத்த விஜய் திட்டமிட்டு உள்ளார். சென்னையில் இந்த மக்கள் சந்திப்பை நடத்த இடம் தேர்வு செய்துள்ளார்.

சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள ஜேப்பியார் கல்லூரியில் இந்த மக்கள் சந்திப்பு நிகழ்வு நடக்கிறது. இதில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1,500-க்கும் மேற்பட்ட பொதுமக்களை விஜய் சந்திக்கிறார். இதன் மூலம் விஜய் புதிய பாணியில் மீண்டும் அதிரடி பிரசாரம் செய்து மக்களின் ஆதரவை திரட்ட உள்ளார்.

தமிழகத்தில் தேர்தல் பொதுக்கூட்டம் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் இன்னும் வெளியிடப்படாமல் கோர்ட்டு பரிசீலனையில் உள்ளது. இதனால் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி உள் அரங்கில் நடக்கிறது.

## ராயப்பேட்டையில் உள்ள எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் தீ விபத்து



**சென்னை,நவ.22:** சென்னை,ராயப்பேட்டை யில் உள்ள ஒயிட்ஸ் சாலையில் அமைந்துள்ள எக்ஸ்பிரஸ் அவென்யூ ஒரு வணிக வளாகமாகும்.

இந்த எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் உள்ள லிஃப்டில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. லிஃப்டில் மின்கசிவு காரணமாக தீவிபத்து ஏற்பட்டதால் பொதுமக்கள் பதறியடித்து ஓடினர். தீவிபத்து காரணமாக கடும் புகைமூட்டம் ஏற்பட்டதால் மாலுக்கு சென்றவர்கள் சிதறி ஓடினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்தனர். மாலில் இருந்த அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

மால் முழுவதும் சூழ்ந்துள்ள புகைமூட்டத்தை இயந்திரங்கள் மூலம் வெளியேற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.மாலில் உள்ள 4 வழிகள் மூலமாகவும் புகையை வெளியேற்றப்படும் பணி நிறைவடைய 4 மணி நேரம் ஆகும் என கூறப்பட்டுள்ளது.

மாலில் உள்ள தியேட்டரில் சினிமா பார்க்கச் சென்றவர்கள் வெளியே காத்திருக்கின்றனர்.

## ஸ்ரீஅமிர்தவல்லி தாயார் வில்வம் அர்ச்சனை



பாக்கம் ஸ்ரீ அமிர்தவல்லி தாயார் ஸமேத ஸ்ரீ கரிய மாணிக்க பெருமாள் திருக்கோயில் ஸ்ரீஅமிர்தவல்லி தாயார் வில்வம் அர்ச்சனை நடைபெற்றது.

## வேலூரில் 658 பேருக்கு வாகன ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக வட்டார போக்குவரத்து அலுவலர் தகவல்!



**வேலூர், நவ.22:** வேலூரில் கடந்த ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரை இடைப்பட்ட காலத்தில் போலீசார் பரிந்துரையின் பேரில், மொத்தம் 658 பேரின் வாகன ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார். குறிப்பாக விபத்துகளில் உயிரிழப்பை ஏற்படுத்தியதாக 73 பேர், குடித்து விட்டு வாகனம் ஓட்டியதாக 85 பேர், அதிவேகமாக வாகனம் ஓட்டியது 129 பேர், செல்போன் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டியதாக 14 பேரின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 658 பேரின் ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இதுபோன்று போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களை இயக்காமல் விதிகளை மதித்து இருசக்கர வாகனங்களை இயக்க வேண்டும் என்று வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தர்ராஜன் வாகன ஓட்டிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

## ST.MARK'S மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளியில் நூற்றாண்டு விழா



சென்னை குரோம்பேட்டை ST.MARK'S மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளியில் நேற்று நூற்றாண்டு விழா தினம் கொண்டாடப்பட்டது. பள்ளிக் குழந்தைகளின் ஆடல் பாடல் நிகழ்ச்சி கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

## கூட்டத்தில் பங்கேற்கும் மக்களின் பாதுகாப்புக்கு அரசியல் கட்சிகளே பொறுப்பு - தமிழக அரசு

**சென்னை, நவ.22:** கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் காரணமாக, தமிழக அரசு அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களுக்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்று சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது. இந்த உத்தரவின் பேரில், தமிழக அரசு பல்வேறு அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியது.

இந்நிலையில் அரசியல் பொதுக்கூட்டம், மக்கள் அதிகம் கூடும் பொதுக்கூட்டம், ஊர்வலம், ரோடு ஷோ, ஆர்ப்பாட்டம், போராட்டம், கலாச்சார மத நிகழ்விற்கு வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. அதில்,

* கூட்டத்தில் பங்கேற்கும் மக்களின் பாதுகாப்புக்கு அரசியல் கட்சிகளே பொறுப்பு.

* 5000 பேருக்கு மேல் கூடும் கூட்டங்களுக்கு இந்த விதிகள் பொருந்தும்.

* வழிபாட்டு தலங்களில் நடைபெறும் மத ரீதியான கூட்டங்களுக்கு இது பொருந்தாது.

* நிகழ்ச்சி தொடங்குவதற்கு 2 மணி நேரத்திற்கு முன்பு அந்த இடத்தில் மக்கள் கூடுவதை தவிர்க்க வேண்டும்.

* நிகழ்ச்சியில் பொது, தனியார் சொத்துக்கள் சேதமடைந்தால் அதற்கான இழப்பீட்டை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களே ஏற்க வேண்டும்.

* கூட்டத்தினரின் பாதுகாப்புக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களே பொறுப்பு.

* அனுமதித்த நேரத்தை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்.

* நிகழ்ச்சி அனுமதிக்கான விண்ணப்பத்தில் முதலுதவி, ஆம்புலன்ஸ் வசதி உள்ளிட்ட மருத்துவ ஏற்பாடு விவரங்களை தெரிவிக்க வேண்டும்.

* திடீரென ஏற்பாடு செய்யக்கூடிய ஆர்ப்பாட்டம், போராட்டங்களுக்கு ஆட்சியர், சென்னை மாநகர காவல் ஆணையர் முடிவெடுக்க அதிகாரம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நடப்பாண்டில் 6-வது முறையாக நிரம்பிய அடவிநயினார் அணை



**தென்காசி, நவ.22:** தமிழகத்தில் கடந்த சில நாட்களாக நெல்லை, தென்காசி மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை மற்றும் இரவில் பல்வேறு இடங்களில் மழை கொட்டியது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு மற்றும் மலையடிவார பகுதிகளிலும் கனமழை பெய்தது.

இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. தென்காசி மாவட்டத்தில் குண்டாறு தொடர்ந்து நிரம்பி வழிகிறது. மற்ற அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

இதுதவிர மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள காட்டாற்று வெள்ளம் தாமிரபரணியில் கலந்து ஓடுகிறது. மேலும் ஊர்ப்பகுதிகளில் பெய்த மழை தண்ணீரும் ஆற்றில் கலந்து செல்கிறது.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே மேக்கரை பகுதியில் 132 அடி கொள்ளளவு கொண்ட அடவிநயினார் அணை உள்ளது. இந்த அணை மூலம் சுமார் 72 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாசன வசதி பெறுகின்றது. அதுபோல் 50-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் திகழ்கின்றது.

இந்த அணை நடப்பாண்டில் ஏற்கனவே 5 முறை தனது முழு கொள்ளளவை எட்டி தண்ணீர் நிரம்பி வழிந்தது. தற்போது, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த கனமழையால் மீண்டும் அணை நிரம்பியுள்ளது.

இந்த ஆண்டில் மட்டும் அணையானது 6-வது முறையாக நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதேபோல் களக்காடு மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால் அங்குள்ள தலையணையில் நீர்வரத்து அதிகரித்து தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. மேலும் தொடர் மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், களக்காடு புலிகள் காப்பகதுணை இயக்குனர் (கூடுதல் பொறுப்பு) ஸ்ரீகாந்த் உத்தரவின்பேரில், மறுஉத்தரவு வரும் வரை தலையணையில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது என்று களக்காடு வனச்சரக அலுவலர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## குன்றத்தூர் அருகே நகை, பணத்திற்காக தாய், மகள் கொலை

# 3 பேருக்கு 6 ஆயுள் தண்டனை விதிப்பு



**சென்னை, நவ.22:** சென்னையை அடுத்த குன்றத்தூர் அருகே 2016ல் நகை, பணத்திற்காக தாய், மகளை கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

வசந்தா (64) மற்றும் அவரது மகள் தேன்மொழி (32) ஆகிய இருவரையும் வீட்டு வேலைக்கு வந்த சத்யா, தவ்லத் பேகம், இவர்களின் நண்பர் ஜெயக்குமார் இணைந்து கொலை செய்துள்ளனர். மேலும், தேன்மொழியின் 7 வயது மகளையும் கழுத்தில் வெட்டிவிட்டு நகை, பணத்துடன் தப்பியுள்ளனர்.

வீட்டின் உள்ளே மயங்கிக் கிடந்த சிறுமி, மறுநாள் காலை வெளியே வந்தபோதுதான் இந்த கொலைச் சம்பவம் தெரியவந்தது. இதனையடுத்து சிறுமியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சத்யா, தவ்லத் பேகம், ஜெயக்குமார் ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்து வந்த காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும் தலா இரட்டை ஆயுள் தண்டனைகள் விதித்து தீர்ப்பளித்தது. மேலும், குற்றவாளிகள் மூவருக்கும் 80 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.




## நெருங்கும் திருக்கார்த்திகை தீப திருவிழா

# கோவையில் அகல் விளக்குகள் தயாரிக்கும் பணிகள் தீவிரம்



**கோவை, நவ.22:** கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களான ஆர்.பொன்னாபுரம், முத்தூர், வடக்கிபாளையம், பில்சின்னாம்பாளையம், கோட்டூர், ஓடையக்குளம், அம்பாரம்பாளையம், சமத்தூர், அங்கலக்குறிச்சி உள்ளிட்ட பல கிராமங்களில் மண்பாண்ட தொழிலில் ஈடுபடுவோர் ஏராளமானோர் உள்ளனர்.

சமையலுக்கு தேவையான பானை மட்டுமின்றி, சதுர்த்தியையொட்டி விநாயகர் சிலை, கார்த்திகை தீபத்தையொட்டி அகல் விளக்குகள் என முக்கிய விசேஷங்களில் மண்பாண்ட தொழில் பரபரப்பாக இருக்கும்.

இந்த ஆண்டில் திருக்கார்த்திகை தீபம் வருகிற டிசம்பர் 3-ந் தேதி நடக்க உள்ளது. இதனால் கடந்த 2 மாதத்திற்கு முன்பு இருந்தே மண்பாண்ட தொழிலாளர்கள் பலரும், அகல் விளக்கு தயாரிப்பில் முழு வீச்சில் ஈடுபட்டனர்.

தீபம் ஏற்றி வழிபட களிமண்ணால் செய்யப்படும் விளக்குகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால் வெளியூர் வியாபாரிகள் பலர், விற்பனை செய்ய வாங்குவதற்காக ஆர்டர் கொடுத்துள்ளனர்.

இதனால் சிறியது முதல் பெரிய அளவிலான அகல் விளக்கு தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதேபோன்று கவுண்டம்பாளையம் சுற்றுவட்டார பகுதிகளில் அகல் விளக்கு தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அகல் விளக்குகள் தயாரித்தாலும், அவ்வப்போது மழை காரணமாகவும், பனிப்பொழிவு ஆரம்பித்து விட்டதாலும் அதனை உலர வைக்கும் பணி மந்தமாகியுள்ளது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தால் மட்டுமே விரைவில் உலர வைக்க முடியும் என்னும் நிலை உள்ளது. இதனால் அகல் விளக்கு தயாரிக்கும் பணியில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். களிமண்ணால் தயாரிக்கப்பட்ட அகல் விளக்குகள் விற்பனைக்காக மார்க்கெட்டுக்கு அதிகளவு அனுப்பி வைக்கும் முயற்சியில் மண்பாண்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து தொழிலாளர்கள் கூறும்போது, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் அகல் விளக்கு தயாரிப்பு குறைந்துள்ளது. ஒரு டஜன் சிறிய அகல் விளக்கு ரூ.15 வரை விற்பனையாகிறது. கார்த்திகை தீப திருவிழாவுக்கு இன்னும் 2 வாரமே உள்ளதால் அகல் விளக்குகளை உலர வைத்து மார்க்கெட்டுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட உள்ளோம் என்றனர்.

# வில்லங்க சான்றிதழ் போல இனி பட்டா வரலாற்றையும் தெரிந்து கொள்ளலாம்: தமிழக அரசு



**சென்னை, நவ.22:** ஒரு காலத்தில் சொத்துக்கு பட்டா வாங்குவது என்பது குதிரை கொம்பாக இருந்தது. ஆனால் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்த நடவடிக்கை காரணமாக இப்போது அது எளிதாகிவிட்டது. அதாவது https://eservices.tn.gov.in/eservicesnew/ home.html என்ற இணையதளம் மூலம் பொதுமக்கள் எளிதாக பட்டா பெற்றுக்கொள்ளலாம். அதேபோல இப்போது பத்திரப்பதிவு செய்தவுடன் உட்பிரிவு இல்லாத சொத்துகளுக்கு உடனடி பட்டா மாறுதலும் செய்யப்படுகிறது.

தற்போது சொத்து பற்றிய உரிமை விவரங்களை மக்கள் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில், தமிழக அரசின் வருவாய்த்துறை புதிய ஆன்லைன் வசதியை அறிமுகப்படுத்த உள்ளது. அதன்படி ஒரு சொத்தின் உரிமையாளர் யார், அவரது பெயர் என்ன? இதற்கு முன்பு இந்த சொத்து யார் பெயரில் இருந்தது? அதோடு வங்கியில் இந்த சொத்து அடமானத்தில் இருக்கிறதா? இந்த சொத்தின் மீது என்னென்ன பறிமாற்றங்கள் நடந்து இருக்கிறது என்பதை பத்திரப்பதிவு துறை வழங்கும் வில்லங்கச் சான்றிதழ் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

அதே நேரத்தில் ஒரு சொத்தின் தற்போதைய உரிமையாளரை வருவாய்த்துறை மூலம் பட்டா மூலமும் தெரிந்து கொள்ளலாம். ஆனால் பட்டாவில், பத்திரப்பதிவுத்துறை வழங்கும் வில்லங்க சான்றிதழ் போல் அனைத்து விவரங்களையும், பரிமாற்றங்களையும் தெரிந்துகொள்ள முடியாது. ஆனால் தமிழக அரசு, அதற்கு தீர்வு காணும் வகையில் தற்போது "பட்டா வரலாறு" என்ற புதிய சேவையை பொதுமக்களுக்காக கொண்டு வந்துள்ளது.

இதன் மூலம், அந்த நிலத்தின் முன்பிருந்த பட்டா வைத்திருந்தவர்களின் பெயர்கள், பெயர் எப்போது மாற்றப்பட்டது, எந்த ஆணையின் பேரில் மாற்றம் நடைபெற்றது, பட்டா எந்த காலக்கட்டத்தில் யாரிடம் இருந்தது போன்ற விவரங்களை முழுமையாக தெரிந்துகொள்ள முடியும். இந்த பட்டாவுக்கு வில்லங்க சான்றிதழ் பெறும் நடைமுறை அடுத்த வாரம் முதல் சோதனை அடிப்படையில் தொடங்குகிறது. முதல்கட்டமாக ஒரு தாலுகாவில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும் இந்த பட்டா வில்லங்க சான்றிதழ் பெற பொதுமக்கள் கட்டணம் செலுத்த வேண்டும். சோதனை முறை வெற்றி பெற்றுவிட்டால், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அதனை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவார். மேலும் தற்போதைய நிலையில் இந்த பட்டா வரலாறு 2014-ம் ஆண்டு முதல்தான் இப்போதைக்கு எடுக்க முடியும்.

# 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களின் பெயர் விவரங்களில் திருத்தம் மேற்கொள்ள அவகாசம்




**சென்னை, நவ.22:** தமிழ்நாட்டில் நடப்பு கல்வியாண்டில் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட இருக்கிறது. இதையடுத்து எமிஸ் தளத்தில் மாணவர்களின் பெயர், பிறந்த தேதி, பாலினம், புகைப்படம், கைப்பேசி எண், முகவரி உள்ளிட்ட விவரங்கள் சரியாக உள்ளதா? என்பதை சரிபார்த்து திருத்தம் இருப்பின் அவற்றை மேற்கொள்ளலாம் என ஏற்கனவே பள்ளிக்கல்வித்துறையின் கீழ் வரும் அரசு தேர்வுத்துறை தெரிவித்திருந்தது.

அதன்படி, மாணவர்களின் விவரங்களை தேர்வுத்துறை இணையதளத்தில் 19-ந்தேதிக்குள் (நேற்று முன்தினம்) பதிவேற்றம் செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இந்த கால அவகாசம் வருகிற 27-ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேர்வுத்துறை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், 'பெயர் விவரங்களில் திருத்தம் மேற்கொள்ள இதுவே இறுதியான வாய்ப்பாகும். இதை தலைமையாசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த பெயர்ப்பட்டியலின் அடிப்படையிலேயே மதிப்பெண் சான்றிதழ் அச்சிடப்படும் என்பதால் பணிகளை மிகவும் கவனமாக மேற்கொள்ளவேண்டும். ஏதேனும் தவறுகள் நிகழ்ந்தால் சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் மற்றும் பள்ளித்தலைமை ஆசிரியரே பொறுப்பேற்க நேரிடும்' என கூறப்பட்டிருக்கிறது.

# தாய்ப்பால் குடிக்கும்போது விபரீதம்.. பச்சிளம் பெண் குழந்தை மூச்சுத்திணறி உயிரிழப்பு

**வளசரவாக்கம், நவ.22:** சென்னை வளசரவாக்கம், கிருஷ்ணா தெருவைச் சேர்ந்தவர் பிரதீப் குமார் (வயது 35). இவரது மனைவி ராஜேஸ்வரி (30). இவர்களுக்கு ஏற்கனவே 3 பெண் குழந்தைகள் உள்ளன. இதற்கிடையே 4-வது முறையாக கர்ப்பிணியாக இருந்த ராஜேஸ்வரிக்கு கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் 2 நாட்களுக்கு முன்பு அழகான பெண் குழந்தை பிறந்தது. தாயும், சேயும் ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சையில் இருந்து வந்தனர்.

நேற்று காலை ராஜேஸ்வரி, குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்து கொண்டிருந்தார். அப்போது திடீரென குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. உடனடியாக டாக்டர்கள் வந்து குழந்தையை பரிசோதனை செய்தபோது, குழந்தை இறந்து போனது தெரியவந்தது.

இதுகுறித்து வளசரவாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். தாய்ப்பால் கொடுக்கும்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டுதான் குழந்தை இறந்ததா? அல்லது வேறு ஏதும் காரணமா? என போலீசார் விசாரித்து வருகின்றனர்.



# தினம் ஒரு குறள்

**பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல்.** - குறள் 141

పరుల నాలిగోరు భావమ్ము దద్ధర్మ
పరులయందు గానబడదు చూడ - కురల్ 141

**परपत्नी-रति-मूढ़ता, है नहिं उनमें जान ।**
**धर्म-अर्थ के शास्त्र का, जिनको तत्वज्ञान ॥** - कुराल 141

Piranporulaal Pettozhukum Pedhaimai Gnaalaththu
Aramporul Kantaarkan Il - Kural 141

## கூடலூர் அருகே

# சபரிமலை சென்ற ஐயப்ப பக்தர் மாரடைப்பால் உயிரிழப்பு



**கூடலூர், நவ.22:** ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் மல்லிகார்ஜுன ரெட்டி (வயது 42). இவர் கடந்த 19-ந் தேதி வண்டி பெரியாறு சத்திரத்தில் இருந்து புல்மேட்டு பாதை வழியாக 25 பேர் கொண்ட ஐயப்ப பக்தர்கள் குழுவுடன் சபரிமலை சன்னிதானத்துக்கு சென்று கொண்டு இருந்தார்.

சீத்தாக்குளம்-சத்திரம் பகுதிக்கு இடைப்பட்ட இடத்தில் வந்தபோது அவர் திடீரென மயங்கி விழுந்தார். அதனைத் தொடர்ந்து சத்திரத்தில் உள்ள சுகாதார மையத்தில் மல்லிகார்ஜுன ரெட்டிக்கு முதல்-உதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து புல்மேட்டில் இருந்து வந்த மருத்துவக்குழுவினர் பரிசோதனை செய்தனர்.

அப்போது அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

அவரது உடல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. பிரேத பரிசோதனைக்கு பின் உறவினர்களிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது. போலீசாரின் முதல் கட்ட அறிக்கையில் மாரடைப்பு காரணமாக மல்லிகார்ஜுன ரெட்டி இறந்ததாக தெரிவித்துள்ளனர்.

# லஞ்ச வழக்கில் தீயணைப்புதுறை அதிகாரியை சிக்க வைக்க முயற்சி



**நெல்லை, நவ.22:** நெல்லை பாளையங்கோட்டை என்.ஜி.ஓ.'பி' காலனி 8-வது தெருவில் நெல்லை மண்டல தீயணைப்பு துறை துணை இயக்குனர் அலுவலகம் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தில் துணை இயக்குனராக சரவணபாபு பணியாற்றி வருகிறார். இவரது அலுவலகத்தில் கடந்த 18-ந்தேதி மதியம் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் திடீரென சோதனை நடத்தினர்.

அப்போது துணை இயக்குனர் சரவணபாபு அறையில் 6 கவர்களில் கட்டுக்கட்டாக சுமார் ரூ.2 லட்சத்து 29 ஆயிரம் இருந்ததாக கூறி, அவருடைய உதவியாளரான தூத்துக்குடி தீயணைப்பு வீரர் செந்தில்குமார் என்பவரிடம் இருந்து ரூ.22 ஆயிரத்து 700-யும் போலீசார் பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அப்போது அலுவலகத்தில் இருந்த தீயணைப்பு துறை மண்டல துணை இயக்குனர் சரவணபாபு, அங்கிருந்து எடுக்கப்பட்ட பணத்திற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும் அது எப்படி தனது அலுவலகத்திற்குள் வந்தது என்றும் தெரியாது என்று கூறி இருந்தார். இதுதொடர்பாக துணை இயக்குனர் சரவணபாபு மற்றும் அவரது ஓட்டுனர் செந்தில் ஆகிய இருவர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த நிலையில் 17-ந்தேதி நள்ளிரவில் மர்மநபர் ஒருவர் கையில் கவர்களுடன் துணை இயக்குனர் அலுவலகத்திற்கு செல்வது போன்ற வீடியோ காட்சி தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. எனவே தீயணைப்பு துறை துணை இயக்குனரை லஞ்ச ஒழிப்பு போலீசில் மாட்டிவிடுவதற்காக சிலர் செய்த செயலாக இருக்குமோ? என்று கருதுகின்றனர். துணை இயக்குனர் அலுவலகத்துக்கு வந்து சென்ற மர்மநபர் யார் என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்த இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்து நெல்லை மாநகர காவல் ஆணையரிடம் மனு அளித்த சரவணபாபு, கடமையில் நேர்மையான அனுகுமுறையால் ஹானஸ்ட் ஆபீசர் என்று பெயரெடுத்த தன் மீது களங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தனக்கு வேண்டாத யாரோ மர்ம நபர் இந்த சதிவலையில் தன்னை சிக்க வைத்துள்ளதாக தெரிவித்தார்.

# வங்கக்கடலில் இன்று உருவாகிறது குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி

**சென்னை, நவ.22:** வங்கக்கடலில் இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக உள்ளதாக ந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்படி தெற்கு அந்தமான் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும், இது வரும் 24ம் தேதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தீவிரமடையும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

# கவிதை அரங்கம்!



இருளாக வாழ்க்கை
என்றுமே இருந்து
விடுமோ என்று கவலை
கொள்ளாதே கனவுகள்
முளைப்பது இருளில் தான்.

தோல்வியாளர்கள் சாக்கு
போக்குகள் சொல்கின்றனர்
வெற்றியாளர்கள் பணம்
உழைக்கின்றனர்.

சாதிக்கும் எண்ணம்
ஆழ்மனதில் தோன்றி
விட்டால். எது இருந்தாலும்
இல்லை என்றாலும்
சாதிக்க முடியும். உன்
விடா முயற்சியால்.
வாழ்க்கையில்
தவறுகளை செய்ய
பயப்படாதீர்கள் ஏனெனில்
தவறுகளிலிருந்து தான்
கற்றுக் கொள்ள முடியும்.

எந்த இடத்தில்
இருக்கின்றோம் என்ன
செய்து கொண்டு
இருக்கின்றோம் என்பது
முக்கியமில்லை எங்கு
இருந்தாலும் சந்தோஷமாக
இருக்கின்றோமா என்பது
தான் முக்கியம்.

## சரியான மனநிலையும் அணுகுமுறையும்...



சரியான மனநிலையும் அணுகுமுறையும்...
வாழ்க்கையை மாற்றும் மிகப்பெரிய சக்தி.
நாம் எப்படி சிந்திக்கிறோம் என்பதில்தான்
நாம் எப்படி வாழ்கிறோம் என்பதும் தீர்மானமாகிறது.
நேர்மறை எண்ணம் உதித்தால்
இருளில்கூட வழி தெளிவாகும்.
நம்பிக்கையுடன் நடந்தால்
தூரத்தில் இருக்கும் இலக்கு
அருகில் இருப்பது போல உணரப்படும்.
நீங்கள் எண்ணத்தை மாற்றினால்...
வாழ்க்கையின் முழு திசையும் மாறும்.
வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

# கடவுள் நேரில் வந்தால்...

இரவே கூறிவிட்டான்
கடவுள் "நாளை உன் வீட்டிற்கு
வருவேன்" என்று ..

"தாராளமாக வா..வரும் முன்
ஊரை ஒரு சுற்று சுற்றி
பார்த்துவிட்டு வா" என்றேன்.

"எதற்கு ?" என்றான்...

"படைத்தவன் நீதானே..
பதிலையும் அறிந்திருப்பாய்.."
என்றேன்.

" நான் ஊரை சுற்றி வரும்
போதும் உன் கூட பேசுவேன்.
உன் கண் முன் தெரிவேன்"
என்றான் ..

"ஓ திருதராஷ்டிரனுக்கு
யுத்த களம் சஞ்சயன்
மூலம் தெரிந்தது போலவா"
என்றேன்...

கடவுள் முதலில்
கண்டது.. கள்ளமில்லாக்
குழந்தைகளை.. பள்ளிக்குள்
நுழைந்து பாலகனாய் மாறி
குழந்தைகளுடன் விளையாடி
குதுகலித்தான் இறைவன்..
ஆகா எவ்வளவு அருமையான
படைப்பு என்னுடையது என்று
பெருமைப்பட்டுக் கொண்டான்.

பள்ளிக்கு வெளியே
கண் தெரியாத குருட்டு
தம்பதி, தட்டு தடுமாறி
ஒரு குச்சியின் உதவியுடன்
நடந்து கொண்டிருந்தனர்..
காலிழந்த ஒருவன் சக்கரம்
வைத்த பலகையில் ஊர்ந்து
கொண்டிருந்தான். மேலும்
ஒருவன் ஒரு கை செயலிழந்து
போக ஒரு கையால் தனது
வேலைகளை சிரமத்துடன்
செய்து கொண்டிருந்தான்..

"கடவுளே.. உங்கள்
படைப்பை எண்ணி சற்று
முன் பெருமைப்பட்டுக்
கொண்டீரே.. இவர்களையும்
தாங்கள் தானே படைத்தீர்..
எதற்கு இந்த ஓர
வஞ்சனை.. இவர்கள் என்ன
பாவம் செய்தார்கள் ஏன்
இவர்களுக்கு இந்த ஊனம்..
இந்த உலகத்தை பார்க்க
முடியாத கண்ணிழந்தவர்..
ஒலிகளைக் கேட்க
முடியாமல் காது கேட்காதவர்..
காலின்றி நடக்க முடியாதவர்"



என்றேன் நான் நெடுநாளாய்
மனதை உறுத்தி கொண்டிருந்த
கேள்வியை அவனிடம் கேட்டு
விட்ட திருப்தி எனக்கு.

ஆண்டவனால் பதில் சொல்ல
முடியவில்லை, அசதியுடன்
நடந்தான்.. நடக்க முடியாமல்
கால்கள் தடுமாறின.. குண்டும்
குழியுமாய் சாலைகள்..
அள்ளப்படாத குப்பை..
எதற்கும் காசை எதிர்பார்க்கும்
அலுவலர்கள்.. பேராசை
பிடித்த மனிதர்கள்..

இறைவனுக்கே சந்தேகம்
வந்துவிட்டது நாம் படைக்கும்
போது மனிதனின் மனதை
சரியாக படைக்கவில்லையோ
ஏன் இவ்வளவு குறுக்கு
புத்தியாயிருக்கிறான்.எங்கும்
லஞ்ச லாவண்யம். அடுத்து
கெடுக்கிறான்.. நீதியை
விட அநீதியே தலைவிரித்து
ஆடுகிறது. மனம் நொந்து
போனான்.

" நான் பச்சை பசேலென
படைத்த பூமி எங்கே?
இப்போது இருக்கும் பூமி
இல்லையே அது .. எத்தனை
அழகிய மரங்கள்.. எத்தனை
ஆறுகள்.. எத்தனை
குளங்கள்.. எவ்வளவு
இயற்கை வளம் நிரம்பியதாய்
படைத்தேன். இப்போது
அனைத்தையும் கெடுத்து
எங்கும்..எதையும் எந்திர
மயமாக்கி விட்டானே மனிதன்"

"சாலைகள் தோறும்
எத்தனை மருத்துவமனைகள்
அத்தனையிலும்
நிரம்பி வழியும் கூட்டம்.
எல்லாம் மனிதனாக
உண்டாக்கிக் கொண்டது
இயற்கையோடு இணைந்து
வாழ்ந்திருந்தால் இவன்
இப்படி வியாதியஸ்தனாக
மாற வேண்டிய அவசியம்
இல்லையே" என்று மனம்
நொந்தான் இறைவன் ..

"இறைவன் மனிதனாக பிறக்க
வேண்டும்"
என்ற கவி வரிகள் நினைவுக்கு
வர, புன்னகைத்துக்
கொண்டேன்.பாவம் இதற்கு
மேல் தாங்க மாட்டான்
அவன்.. என்று அவசரமாக "நீ
ஊரை சுற்றியது போதும் என்
இல்லத்திற்கு வா" என்றேன் ..

ஆத்மார்த்தமான அன்போடு
அவனை வரவேற்று,
உபசரித்து, அவனுக்கு
பிரத்தியோகமாக என் கையால்
செய்திருந்த பொங்கலை
படைத்தளித்தேன்.. அவன்
புகழை என் இனிய
குரலில் பாட , அவன்
மனச்சோர்வு நீங்க கேட்டுக்
கொண்டிருந்தான் .

மனம் நொந்து சோர்ந்து
போயிருந்த இறைவன் .."
உன் போன்ற பக்தர்களின்
ஆத்மார்த்தமான அன்பு
நிறைந்த இதயம் மட்டும்
தான். இவ்வுலகத்தில் நான்
இனி குடியிருக்கும் இடமாக
இருக்கும். அது தவிர நான்
இங்கு எங்குமே இருக்க
பிரியப்படவில்லை .பாவிகள்
கோயில்களை கூட வியாபார
ஸ்தலமாக மாற்றி விட்டார்கள்.

ஆத்மார்த்தமான பக்தி எந்த
மனதில் இருக்கிறதோ..
யார் சக மனிதரை நேசித்து
அறவழியில் வாழ்கிறார்களோ..
அவர்கள் மனது மட்டுமே
இனி நான் வாழும் கோயில்..
நான் போய் வருகிறேன்" என்று
விடைபெற்றுச் சென்றான்
இறைவன்..

இனி ஒரு முறை
இந்த பூவுலகிற்கு வர
எண்ணுவானா.. சிரித்துக்
கொண்டேன் நான்.

**தி.வள்ளி**
திருநெல்வேலி.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*"சார் உங்க பொண்ணு என் மேலே பைத்தியமா இருக்கா, அவளையே நான். . . (அப்பா குறுக்கிட்டு)*

*"அவ ஒரு சரியான பைத்தியம்னா"*



*"அதான் சார் என் மேல பைத்தியம்"*

*"அதான் எப்படீன்னு புரியல"*

# தினம் ஒரு சமையல்



## சுவையான தேங்காய் சாதம்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சோறு | -2 கப் |
| துருவிய தேங்காய் | -1 கப் |
| பச்சை மிளகாய் | -2 (நறுக்கியது) |
| உலர் மிளகாய் | -2 |
| இஞ்சி | -1 INCH |
| கடுகு | -1/2 டீஸ்பூன் |
| உளுத்தம் பருப்பு | -1 டீஸ்பூன் |
| கடலை பருப்பு | -1 டீஸ்பூன் |
| கருவேப்பிலை | -சில |
| நெய் | -1 டீஸ்பூன் |
| எண்ணெய் | -1 டேபிள் ஸ்பூன் |
| உப்பு | -தேவையான அளவு |

செய்முறை:




முதலில் அடுப்பை பற்ற வைத்து அதில் ஒரு வாணலியை வைத்துக் கொள்ளுங்கள். பின் அந்த கடாயில் எண்ணெய் மற்றும் நெய் தேவையான அளவிற்கு சேர்த்து சூடாக்கவும். கடுகு, போட்டு தாளித்தம் செய்து உளுத்தம் பருப்பு, கடலை பருப்பு ஆகியவற்றை சேர்த்து பொன்னிறமாக வறுக்கவும். பின் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய பச்சை மிளகாய், உலர் மிளகாய், தோல் நீக்கிய இஞ்சி, ஒரு கொத்து கருவேப்பிலையை உருவி சேர்த்து நறுமணம் வரும் வரை வதக்கவும்.

இப்போது துருவிய தேங்காயை சேர்த்து இரண்டு நிமிடம் மட்டும் வறுக்கவும், அதன் நிறம் மாறக்கூடாது. வெள்ளை வெளேர் என இருந்தால் தான் சாப்பிடுவதற்கு சூப்பராக இருக்கும். தேவையான அளவிற்கு இப்போது உப்பு சேர்க்கவும். இறுதியில் தயார் செய்து வைத்துள்ள உதிரி உதிரியான சாதத்தை சேர்த்து மெதுவாக கலக்கவும். கடைசியாக வறுத்த முந்திரி அல்லது வேர்கடலை சேர்த்து அலங்கரிக்கவும்.

சாதம் கலக்கும் போது சிறிது எலுமிச்சை சாறு அல்லது மிளகாய்த் தூள் ஒரு சிட்டிகை சேர்த்தால் சுவை ஒரு ஸ்டேஜ் மேலே போய்விடும்! காலை லஞ்ச் பாக்ஸ்க்கு இது சூப்பராக இருக்கும். தேங்காய் வாசனையும், பருப்பின் மொறு மொறு சுவையும் சேர்ந்து நாக்கில் நச்சென கலக்குது! தேங்காய் சாதம் சூடாக இருக்கும் போது பக்கத்துக்கு மோர், அல்லது உருளைக்கிழங்கு வறுவல், அல்லது எளிய அவியல் இவற்றில் ஏதாவது சேர்த்தால் மொத்தமா ஒரு பண்டிகை உணர்ச்சி வரும்!

## சிறுபுள்ளடி நன்மைகள்



சிறுபுள்ளடியின் முக்கிய நன்மைகள், சிறுநீரகக் கற்களைக் கரைப்பது, சிறுநீர் பாதை நோய்களைக் குணப்படுத்துவது, வலி மற்றும் வீக்கத்தைக் குறைப்பது, மற்றும் முலைப்பால் பெருகுவதற்கு உதவுவது ஆகியவை ஆகும். இது சிறுநீர்ப்பாதை தொடர்பான பிரச்சனைகளுக்கு மிகவும் பயனுள்ளதாகக் கருதப்படுகிறது.

சிறுபுள்ளடியின் நன்மைகள்:

சிறுநீரகக் கற்களைக் கரைத்தல்: சிறுநீரகக் கற்கள் மற்றும் சிறுநீரகப் பிரச்சனைகளுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

சிறுநீர் பாதை நோய்கள்: சிறுநீர்க்குழாய் பிரச்சனைகள், கோனோரியா மற்றும் வலி மிகுந்த சிறுநீர் கழித்தல் போன்றவற்றுக்கு இது உதவுகிறது.

வலி மற்றும் வீக்கத்தைக் குறைத்தல்: ஆயுர்வேத மருத்துவத்தில், வலி மற்றும் வீக்கத்திலிருந்து நிவாரணம் பெற இது பயன்படுத்தப்படுகிறது.

முலைப்பால் அதிகரித்தல்: சில சமயங்களில், முலைப்பால் வற்றிய பெண்களுக்கு இது முலைப்பால் சுரப்பை அதிகரிக்க உதவுகிறது.

சிறுநீர் உற்பத்தி: இது சிறுநீரின் உற்பத்தியை ஊக்குவிக்கிறது.

வாய்வழி சுகாதாரம்: இதன் இலைக் கசாயம் வாய் கொப்பளிக்கப் பயன்படுகிறது.

பிற நோய்கள்: எட்டுவகை மாந்தங்கள், சீதக்கட்டு, வாதாலசகம் போன்ற நோய்களையும் இது குணப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

# பிரம்மாண்டத்தின் உச்சம் வாரணாசி படத்திற்காக எஸ்.எஸ்.ராஜமௌலி வாங்கும் சம்பளம்... இத்தனை கோடியா, அடேங்கப்பா



தமிழ் சினிமாவில் பிரம்மாண்டத்தின் உச்சமாக படங்கள் இயக்குவதில் பெயர் போனவர் ஷங்கர்.

அதேபோல் தெலுங்கு சினிமாவில் இந்திய சினிமா மக்களை கவரும் வண்ணம் படங்கள் இயக்கி கலக்குபவர் தான் எஸ். எஸ்.ராஜமௌலி.

பாகுபலி படத்தில் இருந்தே இவரது படைப்புகள் மக்களிடம் அதிக கவனம் பெற்று வருகிறது.

பாகுபலி படங்களுக்கு பிறகு தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகர்கள் ராம் சரண் மற்றும் ஜூனியர் என்டிஆரை வைத்து ஆர்ஆர்ஆர் படம் இயக்கினார், அப்படத்தில் இடம்பெற்ற ஒரு பாடலுக்கு ஆஸ்கர் விருது எல்லாம் பெற்றார்.

அந்த படத்தை தொடர்ந்து எஸ்.எஸ். ராஜமௌலி, முன்னணி நாயகன் மகேஷ் பாபுவை வைத்து வாரணாசி என்ற படத்தை இயக்கியுள்ளார்.

சுமார் ரூ. 1500 கோடி பட்ஜெட்டில் உருவாகும் இப்படத்திற்காக ராஜமௌலி கடின உழைப்பை போட்டு வருகிறார். இப்பட டைட்டில் டீஸர், பெயர் வெளியீடே பிரம்மாண்டமாக இருந்தது, ரசிகர்களை பிரம்மிக்க வைத்தது.

இந்த படத்தின் இயக்குனரான ராஜமௌலி சம்பளத்திற்குப் பதிலாக படத்தின் மொத்த லாபத்தில் பங்கு பெறுகிறார் என்கின்றனர். இந்தப் பங்கு பல நூறு கோடிகளைத் தொடலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.



சினிமா

அஞ்சு குரியன் அவ்வப்போது இன்ஸ்டா தளத்தில் போட்டோவை வெளியிடுவதை வழக்கமாக வைத்துள்ளார்.

அந்த வகையில், தற்போது மாடர்ன் லுக்கில் அஞ்சு வலம் வரும் அசத்தல் ஸ்டில்ஸ். இதோ,

# அதில் முன்னேற்றம் இருப்பதால் மருதநாயகம் படம் சாத்தியம்... கமல்ஹாசன் சொன்ன விஷயம்



சினிமாவின் மீது தீரா காதல் கொண்டுள்ள பிரபலங்களில் ஒருவர் தான் நடிகர் கமல்ஹாசன்.

எத்தனையோ படங்கள் நடித்துள்ளார், நிறைய படங்களை இயக்கியும் உள்ளார், ஆனால் அவரது கனவுப்படம் என்றால் மருதநாயகம் தான். ஆங்கிலேயே காலத்தில் வாழ்ந்த மருதநாயகன் என்ற மன்னரை பற்றிய படம் அது.

கமல்ஹாசனே இயக்கி நடிக்க, அபிராமி போன்ற கலைஞர்கள் முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பதாக இருந்தது. இப்படத்தின் தொடங்க விழாவிற்கு இங்கிலாந்து ராணி எலிசபெத் வந்திருந்தது அப்போது மிகவும் வைரலாக பேசப்பட்டது.

படத்திற்காக நிறைய ஸ்பெஷல் விஷயங்கள் செய்து வந்தவர் அப்போதைக்கு தொழில்நுட்பம், பட்ஜெட் காரணங்களால் படத்தை பாதியிலேயே நிறுத்திவிட்டார்.

தற்போது சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொள்வதற்காக கோவா சென்றிருக்கிறார் கமல்ஹாசன்.

அப்போது மருதநாயகம் பற்றி கேள்வி எழுப்ப அதற்கு அவர், தொழில்நுட்பம் முன்னேறியிருக்கும் இந்தக் காலகட்டத்தில் மருதநாயகம் படம் சாத்தியமாகலாம் என்பது என்னுடைய நம்பிக்கை என்றிருக்கிறார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**